## 2.20 கோட்டம் மற்றும் மாவட்ட ஆட்சியரின் அலுவலக அமைப்பில் நிர்வாக அமைப்பு மற்றும் அலுவலர்கள் பதவிப் பெயர் மாற்றம் – மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (வளர்ச்சி), ஊரக வளர்ச்சி உதவி இயக்குநர் (ஊராட்சிகள்) மற்றும் (தணிக்கை) என மாற்றம்

---

ஊரக வளர்ச்சித் துறை

அரசாணை (நிலை) எண். 122 நாள் : 8.6.1998

படிக்க :

1. அரசாணை நிலை. 180 ஊரக வளர்ச்சித் துறை, நாள் 9.6.97
2. அரசாணை நிலை எண். 244 ஊரக வளர்ச்சித் துறை, நாள் 1.8.97
3. ஊரக வளர்ச்சி இயக்குநரின் நேர்முக கடித எண். 70774/97, நாள் 24.9.97.

பார்வை இரண்டில் கண்ட அரசாணையில் ஏனையவற்றுக்கிடையே கீழ்காணும் மாற்றங்கள் கோட்டம் மற்றும் மாவட்ட அளவிலான ஊரக வளர்ச்சித்துறை நிர்வாக அமைப்பில் செய்யப்பட்டன.

1. மாவட்ட தலைமையிடத்திலோ அல்லது அருகாமையிலோ அமைந்த கோட்ட வளர்ச்சி அலுவலர் (Divisional Development Offices) பெயரை வளர்ச்சி அலுவலர் (ஊராட்சிகள்) என மாற்றியமைத்து அவர் கீழ் பணியாற்றும் பணியாளர்களின் எண்ணிகையில் மாற்றம் ஏதும் செய்யவில்லை.

2. மாவட்டத்தின் மற்றொரு கோட்ட வளர்ச்சி அலுவலரின் பெயர், வளர்ச்சி அலுவலர் (தணிக்கை) என மாற்றியமைத்து, அவர் கீழ் பணியாற்றும் பணியாளர்களின் எண்ணிக்கையில் சிறிய அளவிலான மாறுதல் செய்யப்பட்டது. இம்மாற்றத்தினால் ஏற்பட்டுள்ள தகுதியான பணியாளர்கள் மாவட்ட அளவிலான பொறியியல் பிரிவிற்கும் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமைக்கு மாற்றப்பட்டனர்.

3. கடலூர். விழுப்புரம், வேலூர், சேலம், தர்மபுரி, ஈரோடு, கோயம்புத்தூர், திருச்சிராப்பள்ளி, பெரம்பலூர், தஞ்சாவூர், திருநெல்வேலி ஆகிய 11 மாவட்டங்களிலுள்ள மூன்றாவது கோட்ட வளர்ச்சி அலுவலர் மற்றும் அவர்கீழ் பணியாற்றும் பணியாளர்கள் தற்காலிகமாக மாவட்ட ஊராட்சிக்கு மாற்றப்பட்டனர்.

4. வளர்ச்சி அலுவலர்கள் (ஊராட்சிகள்) மற்றும் வளர்ச்சி அலுவலர்கள் (தணிக்கை) அவர்களின் அலுவலகங்கள் இடமாற்றமின்றி செயல்படும். தற்போது இரண்டாவதாக கோட்ட வளர்ச்சி அலுவலர்கள் இல்லாத மாவட்டங்களில் வளர்ச்சி அலுவலர்கள் (தணிக்கை) அவர்களின் அலுவலகம் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்திலேயே செயல்படும்.

5. வளர்ச்சி அலுவலர் (ஊராட்சிகள்) மற்றும் வளர்ச்சி அலுவலர் (தணிக்கை) மாவட்ட அளவில் பயணம் மேற்கொள்ளலாம். எல்லா கிராம ஊராட்சிகள் வளர்ச்சி அலுவலர் (ஊராட்சிகள் ) கட்டுப்பாட்டிலும் எல்லா மூன்றடுக்கு ஊராட்சி அமைப்புகள் வளர்ச்சி அலுவலர் (தணிக்கை ) கட்டுப்பாட்டிலும் இயங்கும்.

6. இவ்விரண்டு அலுவலர்களும் தங்கள் நிர்வாக கட்டுப்பாட்டில் இயங்கும் பணியாளர்களுக்கும் ஜே.வி.வி.டி தொழில் நுட்ப பணியாளர்கள், கைப்பம்பு மற்றும் கைப்பம்பு பராமரிப்பு பணியாளர்களுக்கும், வானொளி மற்றும் தொலைக்காட்சி பராமரிப்பு பணியாளர்களுக்கும் சம்பளம் வழங்கும் அலுவலர்களாக இருப்பார்கள். வளர்ச்சி அலுவலர் (ஊராட்சிகள்) ஊராட்சி ஒன்றியங்களுக்கும். மாவட்ட ஊராட்சிகளுக்கும் மான்யங்கள் விநியோகிப்பார்.

7. வெளியிடப்பட்ட ஆணைகளுடன் மாவட்ட ஆட்சித் தலைவரின் நேர்முக உதவியாளர் ( ஊரக வளர்ச்சி) வளர்ச்சி அலுவலர் ( ஊராட்சிகள்) மற்றும் வளர்ச்சி அலுவலர் (தணிக்கை) அலுவலர்களின் பணி பொறுப்புகள் பட்டியல்கள் வெளியிடப்பட்டு அவை தேவைப்படும்போது மாற்றப்படும் எனவும் குறிப்பிடப்பட்டது.

2. அலுவலர்களின் பதவி பெயர்களில் மாற்றங்கள் மற்றும் அலுவலர்களின் அதிகாரங்கள் மற்றும் கடமைகளிலும் சில மாற்றங்கள் மேற்கொள்ள வேண்டுமென பார்வை மூன்றில் கண்ட கடிதத்தில் ஊரக வளர்ச்சி இயக்குநர் அரசை கேட்டுக்கொண்டுள்ளார். ஊரக வளர்ச்சி இயக்குநரின் செயற்குறிப்பு கவனமாக பரீசிக்கப்பட்டது.

**3.** அரசு கீழ்வரும் ஆணைகளை பிறப்பிக்கின்றது.

அ சில அலுவலர்களின் பதவி பெயர்கள் கீழ்வருமாறு மாற்றம் செய்யப்படுகின்றன.

| தற்போதுள்ள பதவியின் பெயர் | மாற்றம் செய்யப்படும் பதவியின் பெயர் |
|---|---|
| 1. மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர். ( ஊரக வளர்ச்சி ) | மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர். ( வளர்ச்சி ) |
| 2.வளர்ச்சி அலுவலர் (ஊராட்சிகள்) | ஊரக வளர்ச்சி உதவி இயக்குநர் (ஊராட்சிகள்) |
| 3. வளர்ச்சி அலுவலர் (தணிக்கை) | ஊரக வளர்ச்சி உதவி இயக்குநர் (தணிக்கை) |

ஆ. மாவட்டத்திலுள்ள மூன்றடுக்கு ஊராட்சி அமைப்புகளில் பணியாற்றும் அனைத்து பணியாளர்கள் ஜே.வி.வி.டி பணியாளர்கள், வானொலி மற்றும் தொலைக்காட்சி பராமரிப்பு பணியாளர்கள் மற்றும் கைப்பம்பு மற்றும் விசைப்பம்பு பராமரிப்பு பணியாளர்கள், மாவட்டஅளவில் பணியாற்றும் விசைப்பம்பு பராமரிப்பு பணியாளர்கள் தமிழ்நாடு விவசாய வளர்ச்சித் திட்டம் (குடிநீர் விநியோகம் ) பணியாளர்கள், எரிசாண வாயு திட்ட பணியாளர்கள் பற்றிய பணியமைப்பு விவகாரங்களையும் மற்றும் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமைக்கு ஒதுக்கப்படாத இதர பணிகளையும், இனி புதிதாக பெயர் மாற்றம் செய்யப்படும் மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (வளர்ச்சி) மேற்கொள்ள வேண்டும்.

இ. ஊரக வளர்ச்சி பொறியியல் உபகோட்ட அளவிலான பணியமைப்பில் உள்ள உதவி செயற்பொறியாளர் மற்றும் அலுவலக பணியாளர்கள் கோட்ட அளவிலான கைப்பம்பு மற்றும் விசைப்பம்பு பராமரிப்பு பணியாளர்கள் மற்றும் வானொலி மற்றும் தொலைக்காட்சி பராமரிப்பு பணியாளர்கள் ஆகியோர்களுக்கு சம்பளம் வழங்கும் அலுவலராக மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (வளர்ச்சி) நியமிக்கப்படுகிறார்.

ஈ. முன்பு இருந்த ஊரக வளர்ச்சி நிர்வாக அமைப்பில் கோட்ட வளர்ச்சி அலுவலரின்கீழ் வட்டம் மற்றும் கிராம ஊராட்சிகளில் பணிபுரிந்து வந்த வட்டார வளர்ச்சி அலுவலர் மற்றும் இதர பணியாளர்கள் குறித்தான பணியமைப்பு அதிகாரங்கள் ( தண்டனை குறித்த அதிகாரத்தையும் உள்ளடக்கி) மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (வளர்ச்சி) அவர்களுக்கு பொதுவான ஆணை தற்போது பிறப்பிக்கப்படுகிறது.

உ. மூன்றடுக்கு ஊராட்சி நிர்வாகம் தொடர்பான வரையறுக்கப்பட்ட அதிகாரத்தை நீக்குவது / இரண்டாக பிரிப்பது/ சேர்த்து வைப்பது/ பெயர் திருத்தங்கள் செய்வது போன்றவை ஊராட்சி ஒன்றிய தீர்மானங்களை ஆய்வு செய்து அதன்மீது தொடர் நடவடிக்கை எடுப்பது, வரவு செலவு திட்டம் நிர்வாக அறிக்கைகள் மற்றும் பஞ்சாயத்து சட்டப்படியான தீர்வை நடவடிக்கை(Surcharge proceeding) மற்றும் பிற நடவடிக்கைகள் எடுப்பது சட்டபூர்வமான (Statuory) மற்றும் சட்டபூர்வமல்லாத(Non-Statuory) மாகிய தொகை வழங்குவது மற்றும் குறிப்பிடப்பட்ட வருவாய் (Assigned Revenue) ஒப்பளிப்பு செய்வது அலுவலகங்கள் சொத்து பற்றிய பதிவுகளை ஆய்வு செய்வது போன்ற அதிகாரங்களை தற்போது புதிதாக மாற்றம் செய்யப்படும் ஊரக வளர்ச்சி உதவி இயக்குநர் (ஊராட்சிகள்) கவனிக்க அதிகாரம் வழங்கப்படுகிறது.

ஊ. ஊராட்சிகள் தேர்தல்கள் மற்றும் மக்கள் தொகை கணக்கெடுப்பு சம்மந்தமான வேலைகள் தற்போது மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் ( வளர்ச்சி) அவர்களுக்கு வழங்கப்படுகிறது.

எ. ஊராட்சி வளர்ச்சி நிர்வாகம் அமைப்பில் மாவட்ட தலைநகரில் கோட்ட வளர்ச்சி அலுவலகம் இருந்திராத விழுப்புரம், தேனி மற்றும் விருதுநகர் போன்ற இடங்களில் தற்போது புதிதாக பெயர் மாற்றம் செய்யப்படும் ஊரக வளர்ச்சி உதவி இயக்குநர் (ஊராட்சிகள்) மற்றும் அவர்கட்டுப்பாட்டில் இயங்கும் அலுவலகம் கோட்ட அளவிலான உதவி செயற்பொறியாளர் (ஊரக வளர்ச்சி ) மற்றும் அவரது பணியாளர்கள், கைப்பம்பு மற்றும் விசைப்பம்பு பராமரிப்பு பணியாளர்கள் மற்றும் வானொலி மற்றும் தொலைக்காட்சி பராமரிப்பு பணியாளர்கள் நீங்கலாக) மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் அமைய இட ஒதுக்கீடு செய்ய ஆணையிடப்படுகின்றது.

ஏ. கோட்ட அளவிலான உதவி செயற்பொறியாளர் மற்றும் அவர் கட்டுப்பாட்டில் இயங்கி வரும் பணியாளர்கள் கைப்பம்பு மற்றும் விசைப்பம்பு பராமரிப்பு பணியாளர்கள் மற்றும் வானொலி மற்றும் தொலைக்காட்சி பராமரிப்பு பணியாளர்கள் நீங்கலாக) தற்போது புதிதாக பெயர் மாற்றம் செய்யப்படும் ஊரக வளர்ச்சி உதவி இயக்குநர் (தணிக்கை) அலுவலகம் மாவட்ட ஆட்சியரின் அலுவலகத்தில் அமைய மேற்கொண்டு வாடகை வழங்கல் போன்ற கூடுதல் செலவினமில்லாது இடம் ஒதுக்க இயலுமானால் செய்ய ஆணை பிறப்பிக்கப்படுகிறது.

ஐ. தற்போது பெயர் மாற்றம் செய்யப்படும் மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் ( வளர்ச்சி ) ஊரக வளர்ச்சி உதவி இயக்குநர் (ஊராட்சிகள்) ஊரக வளர்ச்சி உதவி இயக்குநர் (தணிக்கை) ஆகியோர்களின் கடமைகளும், அதிகாரங்களும் மாற்றம் செய்யப்பட்டு திருத்திய பொறுப்பு பட்டியல் (இந்த அரசாணையுடன் அனுப்பப்படுகின்றன).

**4.** தற்போது பெயர் மாற்றம் செய்யப்படும் ஊரக வளர்ச்சி உதவி இயக்குநர் (ஊராட்சிகள்) மற்றும் ஊரக வளர்ச்சி உதவி இயக்குநர் (தணிக்கை) மாவட்ட அளவில் மட்டும் மேற்கொள்ளும் அதிகாரம் உள்ளவர்களாக இருப்பர் மற்றும் அவர்கள் கட்டுப்பாட்டில் இருக்கும் பணியாளர்களுக்கு தகுதிக்கேற்ப அதிகாரம் உள்ளடக்கி சம்பளம் வழங்கும் அலுவலர்களாகவும் இருப்பர் என அரசு ஆணையிடுகிறது.

**5.** தற்போது பிறப்பிக்கப்பட்ட அரசாணையை ஒட்டி தொடர்புடைய பணி விதிகளில் உரிய பெயர் மாற்றங்கள் செய்ய மற்றும் திருத்தம் வெளியிட ஊரக வளர்ச்சி இயக்குநர் அரசிற்கு செயற் குறிப்புகளினை தனியே அனுப்பவேண்டும்.

**6.** இந்த ஆணை நிதித் துறையில் அலுவல் சார்பற்ற குறிப்பு எண் **38142**/ஆர்.டி/**98–1** நாள் **5.6.98** இசைவுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

**இரமேஷ் சந்திர பண்டா**
அரசு செயலாளர்

## JOB CHART

### PERSONAL ASSISTANT ( DEVELOPMENT ) TO THE COLLECTOR.

All establishment Matters relating to Panchayat Development Staff at Village, Block, Division and District level including Engineering Staff, Hand Pump and Power Pump maintenance staff TNADP (Water supply) Staff, Biogas staff and Panchayat Assistants Part-time clerks and Group Cum Bill Collectors, Sanitary Workers, Power Pumps / Over Head Tank Operators, Makkal Nala Paniyalargal etc.

Matters relating to vehicles, telephone , stationary, furniture, electricity and buildings in Panchayat Development Unit.

Preparation of Budget Estimates, Revised Estimates, FMA Estimates in respect of Panchayat Development Unit and reconciliation of Accounts.

Monitoring of schemes like Twenty Point Programme, Fifteen Point Programme Special Component Plan, Drought Relief and Flood Relief Programme, Family Welfare, Public Health. Eye Camps, Health Camps, Social Welfare and Adi Dravidar Welfare Measures, Flag Day, TB Seals. and other schemes not entrusted to District Rural Development Agency.

Matters relating to co- ordination of various departments and organizations involved in development activities.

Matters relating to census in Village Panchayats, Block Level panchayats and District Panchayats.

Matters relating to Elections to Village Panchayats, Pt union and District Panchayat.

Visit of VIPs and Committees etc.

Defunct District Board matters.

Other general matters relating to Tourism, Pollution control, Town and Country Planning etc.

Any other matter as may be assigned to him from time to time by the Government / DRD/ Collector.

### II. ASSISTANT DIRECTOR OF RURAL DEVELOPMENT ( PANCHAYAT)

i) Matters relating to Bifurcation / Upgradation / Delimitation / Renaming of Village Panchays at Union and District Panchayats.

ii) Matters relating to inspection of Village Panchayat, Panchayat union and District Panchayat Offices, records, works and assets etc.

iii) Matters relating to eviction of encroachments.

iv) Surcharge proceeding under the Tamil Nadu Panchayat Act.1994 against Presidents / Chairman, Members of Village Panchayat, Union and District panchayat etc.

v) Scrutiny and follow up of Resolutions, Budgets and administration report of Village Panchayat, Panchayat Unions and District Panchayats.

vi) Release of statutory and non-statutory grants and Assigned revenue due to Village Panchayats, Panchayat Unions and District Panchayats.

vii) Monitoring and recovery of amounts due from Village Panchayats, Panchayat Unions and District Pts. to the Government and other organisations.

viii) Monitoring of collection of taxes, fees, fines and other revenue due to village Panchayats.

ix) Monitoring of works taken up by Village Panchayats, Panchayat Unions and District Panchayat from their funds and from SFC grant and TFC grant

x) Monitoring the maintenance of Drinking water supply, St lights, Roads, M.I. Tanks etc., and sending reports in this regard to DRD/Government.

xi) Any other proceedings under the T.N. Panchayat Act. 1994 not covered above.

xii) Any other matter as may be assigned to him from time to time by the Government.

### III.ASSISTANT DIRECTOR RURAL DEVELOPMENT (AUDIT)

I) Monitoring of progress of audit of Village Panchayats. Fund Account and Village Panchayat Earmarked grants account by the Audit Officer (Dy.BDO) based at Block level and follow up action on audit report.

ii) Follow up action on Audit Reports relating to Panchayats at all the levels presented by Accountant General and Director of Local Fund Audit.

iii) Follow up action on Report of Public Accounts Committees / Public Undertakings Committee and Estimate Committees relating to all the three tiers of Panchayats.

iv) Any other matter as may be assigned to him from time to time by the Government/ DRD/ Collector.